முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 51/2020

நாள். 09.03.2026 பி.வா.சா.1 – திரு. கோயில்ராஜ்

த/பெ - திரு.பால் நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

2,3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1). உங்கள் மனைவி பெயர் வனஜா மேரி என்றால் சரிதான். அவர் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். உங்கள் மனைவிக்காக நிங்கள் சாட்சி கூற வந்துள்ளீர்கள் என்றால் சரிதான். ஜான்சன் என்பவர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் கிணறு இருக்கிறது கிணறு அங்கு உள்ளது அந்த கிணறை நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம் வாதியானவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் எங்கள் சொத்தையும் கிரையம் வாங்க வேண்டும் என்ற நோக்கதில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2) மின்சார இணைப்பு கொடுக்கக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் ஆரம்பம் முதலே இலவச மின்சாரம் வழங்கியுள்ளது. அதன் மின்சார இணைப்பு எண். 064-021-14 என்றால் சரிதான். இந்த மின்இணைப்பு சுடலையாண்டி என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் உங்கள் பெயருக்கு புதிய மின்இணைப்பு எண் எதுவும் கொடக்கவில்லை என்றால் சரிதான்.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.09 18:20:25 +0530

உங்கள் பெயருக்கு மின்இணைப்பை பெயர் மாற்றம் செய்வதற்கு மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனவே வாதி கோரிய ஆ பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் ஏற்கனவே இலவச மின்சாரம் கொடுக்கப்பட்டு விவசாய பயன்பாட்டுக்கு உள்ளது. சொட்டு நீர் பாசாண இணைப்பும் அரசாங்கம் மூலம் மானியம் அடிப்படையில் 1ம் பிரதிவாதி வனஜா மேரிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனால் இந்த வழக்கிற்கு 2,3 ம் பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>1)</u> உங்கள் மனைவி வனஜா மேரிக்கு வழக்கு தபசில் சொத்திற்கு மேல்புறம் பி.வா.சா.ஆ.6 செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி 2 ஏக்கர் பாத்தியம் என்றால் 2 ஏக்கரும் மற்றும் கிணறும் பாத்தியம் ஆகும். பி.வா.சா.ஆ. 6 படி கிழக்கு எல்கை ஜெயராஜ் நாடார், சுந்தர்ராஜன், அந்தோனி ஜெயராஜ் மற்றும் அந்தோணி செல்வகுமார் இவர்கள் நான்கு பேருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அந்த ஜெயராஜ் நாடார் மற்றும் சுந்தர்ராஜ்நாடார் ஆகியோர்கள் தான் வாதிக்கு கிரையம் கொடுத்த நபர்கள் என்றால் சரியல்ல. சுந்தர் ராஜன் தனக்கு பாத்தியப்பட்ட நிலத்தை வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். சுந்தர் ராஜனுக்கு கிணற்றில் உரிமை இல்லை. வா.சா.ஆ. 5 கிரைய ஆவணத்தில் சுந்தர் ராஜ், அந்தோனி ஜெயராஜ் , அந்தோனி செல்வகுமார் ஆகியோர்கள் வாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுளள்து என்றால் சரிதான்.

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.03.09 18:20:30 +0530

2) சர்வே எண்.1695/9 ஏ 2 கிணறு முழுவதும் உங்கள் மனைவிக்கு பாத்தியப்ட்டதா என்றால் பாத்தியப்பட்டது ஆகும. நீங்கள் கூறுவது போல் உங்கள் மனைவிக்கு பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 8 மற்றும் பி.வா.சா.ஆ. 9 ஆவணங்கள் பட்டா ஆவணங்கள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 9 ஆவணம் உங்கள் மனைவி பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணம் உங்கள் மனைவி பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். இந்த பி.வா.சா.ஆ. 8 மற்றும் 9 ஆவணங்களின் படி சர்வே. எண். 1695/4 ஏ மற்றும் 1695/9 ஏ 1 சரிதானா என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 6 ஆவணத்தின் படி தான் பி.வா.சா.ஆ 8 மற்றும் 9 ஆவணங்களான பட்டாக்கள் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3) இந்த இரண்டு பட்டா ஆவணங்களின் படி 2 ஏக்கர் அளவுடையது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 6 செட்டில் மெண்ட் ஆவணத்தின் படி 2 ஏக்கர் நிலம் தவிர வேறு நிலம் கிடையாது என்றால் சரியல்ல கிணறும் கூடுதலாக எனக்கு பாத்தியப்பட்டது ஆகும். கூடுதலாக கிணறு இருக்கும் இடத்திற்கு பி.வா.சா.ஆ. 6 தவிர வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் தனியாக ஆவணம் கிடையாது கிணறும் நிலமும் சேர்ந்த ஆவணம் தான் பி.வா.சா.ஆ. 6 ஆகும். பி.வா.சா.ஆ. 6 ன் படி உங்கள் மனைவிக்கு 2 ஏக்கர் நிலம் தான் பாத்மதிய்ம் என்றால் சரியல்ல. பி.வா.சா.6 ன் செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி புல எண். 1695/9 ஏ 2 ஏ 1 ன் படி உங்கள் மனைவிக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் கிணற்றை தவிர மீதியுள்ள காலி இடம் தான் ஜான்சனுக்கு பாத்தியப்பட்டது என்று சாட்சி கூறுகீறார்.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.09 18:20:34 +0530

4) பி.வா.சா.ஆ. 10 ஆவணத்தின் படி பட்டா எண். 3129 ல் என்னுடைய மனைவி பெயர் கூட்டாக உள்ளது. பி.வா.சா.ஆ. 10 கூட்டு பட்டா என்றால் சரிதான். இந்த கூட்டு பட்டாவில் ஜான்சனுக்கு குறிப்பிட்டு நிலம் உள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 1695/9 ஏ 2 ஏ 1 ல் உங்கள் மனைவிக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின் படி நிலம் கிடையாது என்றால் சரியல்ல. நீங்கள் ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அதிகாரி என்பதால் பி.வா.சா.ஆ. 10 பட்டாவில் உங்கள் மனைவி பெயரை சேர்த்துவிட்டீர்கள் என்றால் சரியல்ல. உங்கள் ஆவணத்தின் படியும் உங்கள் பட்டாவின் படியும் 2 ஏக்கர் நிலம் தான் பாத்தியம் என்றும் ஆனால் மேற்படி பி.வா.சா.ஆ. 10 ல் குறிபிட்டுள்ள சர்வே எண்ணில் உங்கள் மனைவியின் பெயரை சேர்த்து வாதியின் இடத்தை அபகறிக்க முயற்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. ஆவணத்தில் கிணறு உள்ளது ஸ்தலத்தில் அந்த சர்வே எண்ணில் கிணறு இல்லை என்றால் சரியல்ல

5) சர்வே எண். 1695/9 ஏ ல் தான் முதலில் ஏற்பட்ட உட்பிரிவு ஆகும். அதில் தான் கிணறு உள்ளது என்று சாட்சி கூறுகிறார். அப்படி என்றால் நீதிமன்ற ஆணையர் மற்றும் அளவையர் உடன் அளவீடு செய்த போது உங்கள் சரவே எண்ணில் கிணறு இருப்பதாக அறிக்கையில் துலங்கி இருக்கும் என்றால் சரியல்ல சர்வே எண். 1695/9 ஏ உட்பிரிவு செய்யும் போது தான் கிணற்றை சர்வே எண் 1695/9 ஏ 2 ல் பதிவு செய்கிறார்கள். சர்வே எண். 1695/4 ஏ மற்றும் சர்வே எண். 1695/9 ஏ 1 ல் கிணறு எதும் இல்லததால் தான் ஆணையர் அறிக்கையில் துலங்கவில்லை என்றால் 2 ஏக்கர்

JAYANDRAN ANNSRAJA Digitally signed by JAYANDRAN ANNSRAJA Date: 2026.03.09 18:20:39 +0530

நிலம் உட்ரிவின் மூலம் இந்த சர்வே எண்ணில் உள்ளது . எங்களுக்கு பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட கிணறு முழுவதும் சர்வே எண். சர்வே எண். 1695/9 ஏ 2 ல் உள்ளது என்று சாட்சி கூறுகிறார். வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் உங்கள் மனைவிக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு வடகிழக்கு மூலையில் உள்ளது என்றால் கிணற்றை தவிர அவருக்கு பாத்தியப்பட்ட நிலம் உள்ளது என்று சாட்சி கூறுகிறார். கிணறு வடகிழக்கு மூலையில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் வாதி நிலத்தை அபகறிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

6) பி.வா.சா.ஆ. 7 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும் அந்த ஆவணம் கிணற்றின் உரிமையை மாற்றாது என்றும் அது செல்லத்தக்க ஆவணம் அல்ல என்று சொன்னால் மின் இணைப்புக்காக மட்டும் தான் இந்த ஆவணம் வாங்கப்பட்டது என்று சாட்சி கூறுகிறார். இந்த பி.வா.சா.ஆ. 7 ஆவணம் வாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.03.09 18:20:44 +0530